## வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி – 2016/2017

---

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படுகின்ற மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்படு நிலை தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 கம்பனியைத் தாபித்தல்**

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் 1964 ஆம் ஆண்டின் போது ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் நிதி மற்றும் தொழில்நுட்ப பங்களிப்புடன் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி உருவாக்கப்பட்டிருந்தது. 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட நிறுவனங்களை பொதுக் கம்பனியாக நியமதிக்கும் சட்டத்திற்கு இணங்க 1992 செப்தெம்பர் 15 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி என்ற பெயரில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருந்தது

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் விதிகளின் தேவை தொடர்பான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை கணக்காய்வின் விடயப்பரப்பு மற்றும் வரையறையின் கீழே காண்பிக்கப்பட்ட பிரகாரம் இருந்தது.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் பெறப்பட்டிருந்தமையும் எனது பரிசோதனையிலிருந்து எழுகின்ற தூரம் வரை கம்பனியால் முறையான கணக்கு அறிக்கை பேணப்பட்டிருந்தமையும்,

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைகளுக்கு இணங்கியிருந்தமையும் என்னால் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயமாகும்.

**2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 63 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் குறித்த ஊழியர் நலன்கள் தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் வெவ்வேறாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

(i) நியமத்தின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் நிரந்தர அல்லது தீர்மானங்களுடன் மேற்கொள்ளக்கூடிய கொடுப்பனவுகளுடனான நிறுவனம் காலாவதியாகும் வரை வைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மற்றும் காலாவதியாகும் வரை வைத்துக்கொள்ளப்பட்டு நிதிச்சொத்துக்களாக வகைப்படுத்த வேண்டியிருந்த போதிலும், ரூபா 3,844,988,912 தொகையான சொத்துக்கள் ஏனைய நிதிச்சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 46(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 532,548,539 தொகையான முதிர்ச்சியடையும் வரை வைத்துக் கொள்ளப்பட்ட முதலீடுகள் சிறந்த வட்டி முறையை பயன்படுத்தி காலக்கழிவு முறைமைக்கு கணிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 12,632,701 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையும் ரூபா 3,537,156 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கணிப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களில் செயற்பாட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 7,498,445 தொகையான பங்களாக் கட்டணம், வாடகை வருமானம், போக்குவரத்தின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் உர உறைகள் விற்பனை வருமானம் போன்றவை கவனத்தில் கொள்ளப்படாமையினால் அண்ணளவாக வரி வருமானம் ரூபா 130,724 தொகை குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**2.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

கம்பனியின் மீளாய்வாண்டிற்குரிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விடுதலை விற்பனைப் புரள்வு ரூபா 253,056,860 ஆக இருந்த போதிலும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 249,439,632 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 3,617,228 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

10 வருடம் முதல் 20 வருடம் வரையான காலத்தில் 04 நிறுவனங்களிலிருந்து கம்பனிக்கு அறவிட வேண்டிய ரூபா 87,474,958 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் | |
| (i) 131(1) ஆம் பிரிவு | 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 2014/2015 இன் ஆண்டறிக்கை கம்பனியின் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 223 ஆம் பிரிவு | 2015 மே 05 இல் உள்ளவாறு பணிப்பாளர் சபையில் ஏற்பட்ட மாற்றங்கள் 2017 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் கம்பனியின் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | |
| 2.8.1, 2.8.5, 4.3.1, 4.3.2, 5.4.8, 7.9.2 ஆம் பிரிவுகள் | நான்காம் இலக்க களஞ்சியத்தின் கூரையைத் திருத்துவதற்கான ரூபா 1,992,175 பெறுமதியான ஒப்பந்தத்தின் கேள்வி மதிப்பீட்டிற்காக விரிவானதொரு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், அதற்காக செயலாற்றல் பாதுகாப்புப் பிணையும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 மே 24 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/21 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 139,592,032 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 603,272,829 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 463,680,797 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. நிதி வருமானம் ரூபா 164,008,366 இனால் அதிகரித்திருந்த போதிலும், நிர்வாகச் செலவினம் ரூபா 94,368,978 இனாலும், மொத்த இலாபம் ரூபா 866,422,146 இனாலும் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012/2013 ஆம் ஆண்டில் ரூபா 126,856,580 ஆகக் காணப்பட்ட தேறிய இலாபம் 2015/2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 603,272,829 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எனினும், உர மானியத்திட்டம் அகற்றப்பட்டதுடன் மீளாய்வாண்டின்

தேறிய இலாபம் ரூபா 139,592,032 வரை குறைவடைந்திருந்தது. நிதி விளைவில் ஊழியர் ஊதியம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதனத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2012/2013 ஆம் ஆண்டில் ரூபா 428,414,541 தொகையான கம்பனியின் பங்களிப்பு 2016/2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 476,433,758 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அரசாங்க கொள்கைகளுக்கு இணங்க, இலங்கை விவசாய மற்றும் கமநல சேவைத் துறைகளின் வருமானம் மற்றும் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்காக பல்நோக்கு சந்தைகளின் தேவைக்கு ஈடாகும் உர உற்பத்தி மற்றும் விற்பனைகளின் மூலம் கம்பனியின் இலாபத்தன்மையை நிலைபேறாக இருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி தாபிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் விவசாயத் துறைகளில் நெற்பயிர்ச் செய்கை பிரதான பயிராக இருந்தமையால் அரச கொள்கையாக 2006 ஆம் ஆண்டு முதல் 2016 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை உரப் பொதியொன்று ரூபா 350 மானிய விலையில் விவசாயிகளுக்கு கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான 65 சதவீத உரத்தேவை வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியால் நிறைவேற்றப்பட்டிருந்தது.

யூரியா, எம்ஓபீ, ரீஎஸ்பீ போன்ற நேரடியான உர வகைகள் மற்றும் உரக் கலவை என்பனவற்றிலிருந்து ரூபா 12.197 பில்லியன் வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் 01 ஆந் திகதி முதல் உர மானிய நிகழ்ச்சித்திட்டம் அகற்றப்பட்டமையின் காரணமாக உள்ளபடியான விற்பனை வருமானம் ரூபா 2.371 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் அடைய முடியுமாக இருந்த விற்பனை வருமானம் 19.44 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

விவசாய அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் உர மாதிரிகளை பரிசோதனை செய்யும் நோக்கில் ரூபா 17,617,653 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை உள்ளடக்கிய 3000 சதுர அடி அளவான பூரணத்துவமான ஆய்வு கூடமொன்று அமைக்கப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூட முகாமையாளரின் கீழ் 04 ஆய்வுகூட உதவியாளர்களும் மாதிரிகளைச் சேகரிக்கும் ஒருவரும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். எனினும், உரச் செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற உர மாதிரி நிலைமை பரிசோதனை எதுவும் இந்த ஆய்வுகூடம் மூலம் இடம்பெறாமையினால் இந்த சொத்துக்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 4.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டவிடயங்கள்

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியில் 2005 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஏற்பட்டிருந்த உர இருப்பு பற்றாக்குறை தொடர்பாக நான்கு விற்பனை முகவர்களுக்கு எதிராக கூட்டுமொத்தமாக ரூபா 268,335,298 நட்டஈடு கோரி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

**4.4 முகாமைத்துவ செயற்பாடுகள்**

2015 ஆம் ஆண்டில் பொத்துவில் பிரதேச உரக் கஞ்சியத்தின் முன்னாள் உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட 281 மெட்ரிக்தொன் உர இருப்பு பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 15,269,218 தொகையான நட்டத்தை அறவிடுவதற்காக 2017 திசெம்பர் 05 ஆந் திகதி வரையிலும் வழக்குத் தொடுத்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கம்பனியால் மீளாய்வாண்டின் போது விளம்பரம் மற்றும் விற்பனை மேம்படுத்தல்களுக்காக அனுசரணைப் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் மற்றும் சமூக உடனடித் தேவைகளுக்காக ரூபா 15,409,813 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 யூலை 29 ஆந் திகதி நீர்கொழும்பு குறண கிரண்டியா ஹோட்டலில் நடைபெற்ற சந்தைப்படுத்தல் முகவர்களின் சந்திப்பு மற்றும் சேதனப் பசளை உற்பத்தியை வெளிக்கொணரும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பணிப்பாளர் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 5,000,000 தொகையான செலவின எல்லையை விஞ்சி ரூபா 2,749,129 தொகை செலவிடப்பட்டிருந்தது.

மேலும், நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம், மூன்று நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும், அந்த மூன்று நிறுவனங்களும் ஒரு நிறுவனத்தின் கீழ் உள்ள இணைந்த நிறுவனமாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே விழா ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்களில் ரூபா 3,232,500 தொகை அதாவது 43 சதவீத அளவு தலைவர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளரின் ஆலோசனையின் அடிப்படையில் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் நோக்கங்களுக்கு புறம்பாக மீளாய்வாண்டின் போது நாடகம், விவாதம், ஒத்திகை மற்றும் பாடசாலைகளுக்காக அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் 97 ‘‘பக்மஹ’’ விழாவிற்காக ரூபா 2,813,140 தொகையும், 11 நல்லிணக்க சந்திப்புக்களுக்காக ரூபா 513,505 தொகையும், நாடு முழுவதும் விவசாய வாரத்திற்கான பூர்வாங்க ஆரம்ப தினத்தின் போது 2000 மெழுகுவர்த்திகள் ஏற்றி கலாவெவவையில் மிதக்க வைப்பதற்காக ரூபா 390,000 தொகையும், பிறந்த தின வாழ்த்து மடல்களுக்காக ரூபா 480,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தன.

**4.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

கம்பனியால் 2015 சனவரி முதல் 2016 பெப்ரவரி வரை இறக்குமதி செய்யப்பட்ட 365,359 மெட்ரிக் தொன் உரத்தை கொழும்பு துறைமுகத்திலிருந்து 10 கிலோமீற்றருக்குள் உள்ள களஞ்சியத்திற்கு போக்குவரத்துச் செய்வதற்கான நிலுவை போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 35,848,212 தொகையைச் செலுத்துவதற்கு தீர்மானம் எடுத்தமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை போக்குவரத்துச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் ஒரு மெட்ரிக் தொன் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 735 செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்தது. 2015 சனவரி 22 ஆந் திகதி ஏற்பட்ட டீசல் விலை குறைப்பின் அடிப்படையில் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2015 மார்ச் 25 ஆந் திகதி

முதல் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையான காலஎல்லையில் ஒரு மெட்ரிக்தொன் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 629.16 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) உரிய போக்குவரத்து நிறுவனம் இந்த விலை குறைத்து கொடுப்பனவு செய்தமை தொடர்பாக 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி வரையும் எதிர்ப்பொன்று சமர்ப்பிக்காதிருந்ததுடன் முதலாது தடவையாக 2016 பெப்ரவரி 24 ஆந் திகதி விலை குறைப்பதற்கு இணங்காததாகக் குறிப்பிட்டு ரூபா 35,848,212 நிலுவைப் பணத்தை கோரி கடிதமொன்றைச் சமர்ப்பித்திருந்தது.

(iii) 2015 யூன் 16 ஆந் திகதி திறக்கப்பட்ட கேள்விகளுக்காக மேற்கூறப்பட்ட போக்குவரத்து நிறுவனம் ஒரு மெட்ரிக் தொன் உரத்தை போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 635 தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டமையின் காரணமாக அந்த நிலுவைப் பணத்தைச் செலுத்துவதற்கு தீர்மானம் எடுத்த அடிப்படை ஒன்று இல்லாமைஇருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.7 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் பிரதான அலுவலக வளவில் தார் இடுவதற்காக ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு வங்கிப் பிணை முறிகள் அடிப்படையில் ரூபா 8,859,708 தொகை வேலை ஆரம்பிப்பு முற்பணமொன்று 2014 பெப்ரவரி மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. 2014 மே 11 ஆந் திகதி ஒப்பந்தத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையின் காரணமாக செயலாற்றல் பிணை முறியின் பெறுமதியான ரூபா 2,214,927 அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், கணக்காய்வுத் திகதியான 2017 ஒக்தோபர் 30 கணக்காய்வுத் திகதி வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணமான ரூபா 6,644,781 தொகையை அறவிடுவதற்காக பிணைமுறி நீதிமன்றில் வழக்கொன்று (Arbitration) விசாரணையில் காணப்பட்டது.

(ஆ) கம்பனியால் ரூபா 27,188,304 செலவில் நுவரெலியா புளுஎல இல் அமுல்படுத்தப்பட்ட சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றுலா விடுதியை நிர்மாணிப்பதற்கு முன்னர் காணியின் உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக மதியுரைச் சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. நிர்மாணங்களுக்குரிய அளவிடைப் பத்திரங்களைத் தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதம் பயன்படுத்தப்படாமையின் காரணமாக ஒட்டுமொத்த ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியில் ரூபா 576,728 முரணொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

(iii) ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு 180 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணங்கள் பூர்த்தி செய்தல் 136 நாட்களினால் தாமதமாகியிருந்ததுடன் இந்த தாமதத்திற்காக ரூபா 1,762,016 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2017 ஒக்தோபர் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் களப் பரிசோதனையின் போது நிர்மாணங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- மண் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாமல் அத்திவாரம் மற்றும் தூண்களின் நிர்மாணம் என்பன நிர்மாணித்தல் உரிய நியமத்திற்குப் புறம்பானதாகையால் முழுக் கட்டிடத்தினதும் சகல சுவர்களும் வேறாகும் வகையில் வெடித்திருந்தன. மேலும், Slab, Beam, க்ரோனைட் வேர்க் டொப் பிரிந்து செல்லும் வகையில் வெடித்திருந்தது.

- சகல கதவுகள், யன்னல்கள், Flashing மற்றும் கூரை ஓரங்கள் என்பவற்றைப் பொருத்துவதற்காக ரூபா 2,542,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அவை உரிய நியமத்திற்குப் புறம்பாக இருந்தமை.
- கூரை நிர்மாணங்களிற்கான ஒப்பந்தம் Lump Sump முறைமையின் பிரகாரம் கையளிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 464,900 தொகையொன்று ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- கட்டுக்களுக்காக ரூபா 959,500 தொகை செலவிடப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட 100 சதுர மீற்றர் மருத பலகைத் தட்டு கழன்றிருந்ததுடன் ரூபா 3,081,568 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கல்கட்டு மற்றும் மதில்சுவர் என்பனவும் உரிய நியமத்தில் நிர்மாணிக்கப்படாமையினால் அனேக இடங்களில் வெடித்து வேறாகப் பிரிநித்ருந்தது.

(v) கட்டிடத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு வருடமும் 04 மாத கால தாமதத்தின் பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் ஆரம்ப மட்டத்தில் (Skilled) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 163 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 184 ஆனமையால் 21 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

(ஆ) 2016 யூன் 01 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையின் கீழ் களஞ்சிய உதவியாளர்களாக 05 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் அதில் நான்கு உத்தியோகத்தர்களுக்கு அனுராதபுரம் மாவட்டத்தில் அமைச்சரின் பதவியணியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற சோயா செயற்திட்டத்திற்கும் ஒரு உத்தியோகத்தர் கம்பனியின் செயற்பாட்டு பணிப்பாளர் அலுவலகத்தின் அலுவலக உதவியாளராக சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கம்பனியால் அவர்களின் சம்பளத்திற்காக முறையே ரூபா 425,333 மற்றும் ரூபா 350,578 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2015/2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்பபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 113 விடயங்கள் பாதீடு செய்யப்பட்ட உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 99 சதவீதம் முதல் 281 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்க்பபட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிர்வாகம் | ஊழியர்களை ஆட்சேர்த்தல் முறையான பிரகாரம் இடம்பெறாமை |
| (ஆ) | ஒப்பந்த மற்றும் பெறுகை நடைமுறைகள் | பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுதல் |
| (இ) | சொத்துக் கட்டுப்பாடு | குறைப்பயன்பாடுடையதாகக் காணப்படுகின்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு சரியானதாக தயாரிக்கப்படாமை |
| (உ) | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் | கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கணக்கு நடவடிக்கைகளுக்காக பேணப்படவேண்டிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை. |